# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.299/2024</u>

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெங்கநாதன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் ம.சா.ஆ.2, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்று நகல் ம.சா.ஆ.3, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.4, இறந்துபோன தினேஷ் ஓட்டிசென்ற மோட்டார்சைக்கிளின் பதிவு சான்று நகல் ம.சா.ஆ.5, இறந்துபோன தினேஷின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.6, பிரேதகூராய்வுஅறிக்கை நகல் ம.சா.ஆ.7, இறப்புசான்றுநகல் ம.சா.ஆ.8, தினேஷின் வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.9, மனுதாரர்களின் ஆதார் அட்டைகளின் நகல்கள் முறையே ம.சா.ஆ.10 முதல் ம.சா.ஆ.12, தினேஷ் பணிபுரிந்த நிறுவனத்தில் வழங்கப்பட்ட சம்பளசான்று(எதிர்மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.13, தினேஷ் பொறியியல் படிப்பு படித்து 3ம் ஆண்டுவுடன் நின்றுவிட்டார் என்பதை காட்டக்கூடிய மாற்று சான்று நகல் ம.சா.ஆ.14, தினேஷின் பிறப்பு சான்று நகல் ம.சா.ஆ.15,

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**:

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ம.சா.ஆ.13 சான்று வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்மகன் ஓட்டிசென்ற மோட்டார்சைக்கிள் என்தம்பியுடையது. அந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லையென்றால் சரிதான். என்னுடைய இளையமகன் வேலைபார்க்கவில்லை படித்துகொண்டு இருக்கிறார். என்னுடைய இளையமகன் இறந்துபோன மகனின் வருமானத்தை நம்பி இல்லையென்றால் சரியல்ல. என்மகன் தலையில் ஏற்பட்ட காயங்களினால் இறந்துபோனார் என்றால் சரிதான். என்மகன் ஹெல்மட் அணிந்திருந்தால் இறந்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. ஹெல்மட் அணிந்திருந்தார். என்மகனின் வயதை நான் குறைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்மகன் கவனக்குறைவாக மோட்டார்சைக்கிளை ஓட்டிசென்றதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எதிரில் வந்த கார் ஓட்டுநர் மீது எந்த தவறு இல்லையென்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.